**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR**

| | | |
|---|---|---|
| CC. | : | 57 / 2024 |
| Deposition of Witness for | : | PW.4 (LW-5) |
| Name | : | முத்துசாமி |
| Father's Name | : | மாணிக்கம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜரில்லை எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு.317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 25th day of November 2025.**

**முதல் விசாரணை**

நான் சுக்காலியூரில் வசிக்கின்றேன். கொத்தனார் வேலை செய்கின்றேன். 09.04.2023-ம் தேதி சுக்காலியூர் பைபாஸ் சாலையில் உள்ள பாண்டியன் டீ ஸ்டால் அருகில் விபத்து நடைபெற்றது. அது சம்பந்தமாக மறுநாள் 10.04.2023-ம் தேதி காலை 7 மணியளவில் தாந்தோணிமலை காவல்நிலையத்திலிருந்து போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மகஜர் தயார் செய்து மாதிரி வரைபடமும் வரைந்தார்கள். அந்த மகஜரில் நானும், மேகநாதன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் காயம் அடைந்த நபர் எனது உறவினர் இல்லை. நான் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எழுதப்படிக்கத் தெரியாது. ஓரளவிற்கு தெரியும். நான் கையெழுத்து போட்டதாக சொல்லும் பேப்பரில் மாதிரி வரைபடத்தில் உள்ள இடங்களை குறித்து குறிப்பிட்டிருந்தார்கள். அதை என்னிடம் காட்டி கையொப்பம் வாங்கினார்கள். மேகநாதன் என்பவர் என்னுடைய நண்பர் ஆவார். பாண்டியன் டீக்கடையில் காலை நேரத்தில் சுமார் 30 முதல் 40 நபர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். அதற்கு எதிரில் உள்ள பேக்கரியிலும் 30 முதல் 40 நபர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். நான் டீ சாப்பிட்டுவிட்டு வந்தபோது போலீசார் என்னை விசாரித்தார். நான் கும்பலாக இருந்ததால் அங்கு சென்றுபார்த்தேன். போலீசார் மற்றவர்களை விசாரித்து கொண்டிருந்தார்கள். காவல்நிலையத்தில் வைத்து நான் கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஒம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |